**JUDICIAL MAGISTRATE COURT NO.II CHENGALPATTU**

**CC No.423/2024**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.II CHENGALPATTU. |
| Deposition of witness for | : Lw1/Pw1 |
| Name | : சுதர்சன் |
| Father/Husband's Name | : நந்தகோபால் |
| Village | : மறைமலைநகர் |
| Taluk | : |
| Calling | : |
| Age | : 20 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 10.07.2026.

Accused present.

**முதல் விசாரணை:**

நான் தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். கடந்த 27.06.2023 ம் தேதி நான் இரவு பணி முடித்துவிட்டு 12-1 மணியளவில் சேஷ் ஆட்டோ மற்றும் பஸ் இல்லாததால் பொத்தேரி பஸ் கிராசிங்கில் நடந்து சென்று கொண்டிருக்கும் போது ஒரு நபர் பைக்கில் வந்து என்னிடம் பணம் கேட்டார். நான் பணம் இல்லை என்று சொன்ன போது கத்தியை வைத்து என்னை மிரட்டினார். என்னுடைய ஒப்போ போனை தரும் படி சொன்னார், தரவில்லை என்றால் அவ்வளவுதான் என்று சொன்னார். இரவு நேரம் என்பதாலும் அங்கு இருட்டாக இருந்ததாலும், அந்த நபர் யார் என்று எனக்கு சரியாக தெரியவில்லை. நான் எனது போனை கொடுத்துவிட்டு நடந்து சென்றுவிட்டேன். மறுநாள்

மறைமலைநகர் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த புகார் **அதசா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள செல்போன் என்னுடையது அல்ல.

**<u>குறுக்கு விசாரணை</u>**

1. நான் பார்ட் டைம் ஜாம் செய்வதை குறித்து எந்த ஆவணமும் போலீசாரிடம் கொடுத்தேனா என்றால் இல்லை. சம்பவம் நடந்து இருநாள் கழித்து தான் புகார் கொடுத்தேன் என்றால் சம்பவம் நடந்த மறுநாள் புகார் கொடுத்தேன். அவ்வாறு சம்பவம் நடந்திருந்தால் அன்றைய தினமே புகார் கொடுத்திருப்பேன் என்றாலும், அவ்வாறு சம்பவம் நடக்காததினால் தான் நான் இரண்டு நாட்கள் புகார் கொடுத்தேன் என்றாலும் சரியல்ல. சம்பவம் நடக்காததினால் தான் புகாரில் தேதி குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. நான் அவ்வாறு உண்மையாக புகார் கொடுத்திருந்தால் அன்றைய தினமே முதல் தகவல்அறிக்கை பதிவு செய்திருப்பார்கள் என்றாலும், அவ்வாறு கொடுக்காததினால் தான் இரண்டு நாட்கள் கழித்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்திருக்கிறார்கள் என்றால் சரியல்ல.

2. உண்மையாக சம்பவம் நடந்திருந்தால் இருசக்கர வாகனத்தில் வந்ததாக சொல்லப்படும் இருசக்கர வாகனத்தை பற்றிய விவரங்கள் சொல்லி இருப்பேன் என்றாலும், அவ்வாறு சொல்லாததால் அவ்வாறு ஒரு சம்பவம் நடக்கவில்லை என்றால் சரியல்ல. உண்மையாக சம்பவம் நடந்திருந்தால் அந்த செல்போனை மாடல் மற்றும் நிறத்தை பற்றி சொல்லியிருப்பேன் என்றாலும், அவ்வாறு சொல்லாததால் அவ்வாறு ஒரு சம்பவம் நடக்கவில்லை என்றால் சரியல்ல. உண்மையாக சம்பவம் நடந்திருந்தால் செல்போனை திரும்ப கேட்டு மனுதாக்கல் செய்திருப்பேன்

என்றாலும், அவ்வாறு தாக்கல் செய்யாததால் அவ்வாறு ஒரு சம்பவம் நடக்கவில்லை என்றாலும்  சரியல்ல. போலீசாரால் போடப்பட்ட தவறான வழக்கு என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றாலும் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/-S.Sahaana
Judicial Magistrate No.II,
Chengalpattu

**JUDICIAL MAGISTRATE COURT NO.II CHENGALPATTU**

**CC No.423/2024**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.II CHENGALPATTU. |
| Deposition of witness for | : Lw3 /Pw2 |
| Name | : நந்தகுமார் |
| Father/Husband's Name | : மதுரை முத்து |
| Village | : மறைமஉலநகர் |
| Taluk | : |
| Calling | : |
| Age | : 51 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 10.07.2026.

Accused present.

**முதல் விசாரணை:**

நான் பிளம்மிங் வேலை செய்துவருகிறேன். அசா.1 எனது மகன். கடந்த 27.07.2023ம் தேதி எனது மகன் பார்ட் டைம் வேலை முடித்துவிட்டு இரவு 12.30–1 மணியளவில் பொத்தேரி கல்லூரி ஓரமாக ரோட்டில் நடந்து வந்த போது ஒரு நபர் கத்தியை காண்பித்து பணம் கேட்டதாகவும், பணம் இல்லை என்று சொன்ன போது கையில் வைத்திருந்த செல்போனை வாங்கிக் கொண்டு, கத்தினால் குத்திவிடுவேன் என்று சொன்னதாக எனது மகன் சொன்னார். மறுநாள் காலையில் நாங்கள் மறைமலைநகர் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தோம். போலீசார் என்னை விசாரித்தார்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

புகார் தாரர் சுதர்சன் எனது மகன் என்றால் சரிதான். இவ்வாறு சம்பவம் நடந்ததாக எனது மகன் எப்போது என்னிடம் சொன்னார் என்றால் மறுநாள் காலை சொன்னார். போலீசார் விசாரணையில் இரண்டு நாட்கள் கழித்து தான் சம்பவத்தை பற்றி எனது மகன் என்னிடம் சொன்னார் என்று சொல்லிவிட்டு தற்போது மறுநாள் சொன்னதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவத்தை பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றாலும், புகார் தாரர் எனது மகன் என்பதால் அவருக்கு அனுசரணையாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/-S.Sahaana
Judicial Magistrate No.II,
Chengalpattu

**JUDICIAL MAGISTRATE COURT NO.II CHENGALPATTU**

**CC No.423/2024**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.II CHENGALPATTU. |
| Deposition of witness for | : Lw2 /Pw3 |
| Name | : சண்முகசுந்தரம் |
| Father/Husband's Name | : அருளாநந்தம் |
| Village | : மறைமலைநகர் |
| Taluk | : |
| Calling | : |
| Age | : 31 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 10.07.2026.

Accused present.

**முதல் விசாரணை:**

நான் Meesan Logistics நிறுவனத்தில் Assistant Manager ஆக பணியாற்றி வருகிறேன். புகார் தாரரை எனக்கு தெரியாது. கடந்த 3 வருடங்களுக்கு முன்பு 29ம் தேதி நந்தகோபால் மளிகை கடை வைத்திருக்கிறார். அவரது கடைக்கு சென்ற போது அவருடைய மகனின் செல்போன் தொலைந்து போனதாக என்னிடம் சொன்னார். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

குறுக்கு விசாரணை இல்லை.

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/-S.Sahaana
Judicial Magistrate No.II,
Chengalpattu